


**12. 08. 2026**

## தலைப்புச் செய்திகள்

1. மக்களவையில் உறுப்பினர்களின் எண்ணிக்கை 543 என்ற நிலையிலேயே தொடர மத்திய அரசை வலியுறுத்தும் தமிழக அரசின் தனி தீர்மானம் சட்டப்பேரவையில் இன்று நிறைவேறியது.

2. தமிழ்நாட்டில் வரி வருவாயை பெருக்க அரசு பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருவதாக மாநில நிதியமைச்சர் திரு. மரிய வில்சன் கூறியுள்ளார்.

3. இல்லந்தோறும் மூவர்ண தேசிய கொடி விழிப்புணர்வு சைக்கிள் பேரணியை மத்திய அமைச்சர் டாக்டர் மன்சூக் மாண்டவியா புதுதில்லியில் இன்று தொடங்கிவைத்தார்.

4. ஆடி அமாவாசை பக்தி சிரத்தையுடன் இன்று கடைபிடிக்கப்படுகிறது.

5. கஸகஸ்தான் சேலஞ்சர் கோப்பை டென்னிஸ் ஆடவர் இரட்டையர் காலிறுதிக்கு முந்தைய சுற்றில் இந்திய, சீன இணை இன்று களமிறங்குகிறது.

## இனி விரிவான செய்திகள்

************

## முதலமைச்சர்

மக்களவையில் மொத்த உறுப்பினர்களின் எண்ணிக்கை 543 என்ற நிலையில் தொடர வேண்டும் என்று மத்திய அரசை வலியுறுத்தும் தமிழக அரசின் தனி தீர்மானம் சட்டப்பேரவையில் இன்று நிறைவேறியது.

முன்னதாக இந்த தீர்மானத்தை முன்மொழிந்து பேசிய முதலமைச்சர் திரு. விஜய் ஆண்களுக்கு நிகராக பெண்களும் அதிகாரத்தை பெறும் வகையில் அரசு இந்த தீர்மானத்தை கொண்டு வந்துள்ளதாக குறிப்பிட்டார்.

<u>வாய்ஸ்</u>

2011-ம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பு அடிப்படையில் தொகுதி மறுவரையறை செய்திடவும், மக்களவை உறுப்பினர்களின் எண்ணிக்கையை 850 ஆக அதிகரிக்க கொண்டுவரப்பட்ட அரசியல் அமைப்பு சட்ட திருத்த மசோதா தோல்வியடைந்ததையும் அவர் சுட்டிக்காட்டினார்.

மக்கள் தொகை கட்டுப்பாட்டு திட்டங்களை சிறப்பாக செயல்படுத்தி, பொருளாதார வளர்ச்சி, சுகாதாரம் உள்ளிட்ட மக்கள் நல திட்டங்களை மேற்கொள்ளும் எந்த மாநிலமும் தொகுதி மறுவரையறையால் பாதிக்கப்படாமல் பார்த்துக்கொள்வது மத்திய அரசின் தலையாய கடமை என்றும் முதலமைச்சர் எடுத்துரைத்தார்.

பெண்களுக்கு அதிக பிரதிநிதித்துவம் என்பது சலுகை அல்ல, அது ஜனநாயக ரீதியில் அவர்களுக்கு கொடுக்கப்பட வேண்டிய உரிமை என்றும் அவர் குறிப்பிட்டார்.

தமிழக அரசு சார்பில் கூட்டப்பட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களின் ஆலோசனை கூட்டத்தில் பெறப்பட்ட கருத்துக்களின் அடிப்படையில் பேரவையில் அரசு இந்த தனி தீர்மானத்தை கொண்டுவருவதாகவும் முதலமைச்சர் கூறினார்..

மக்களவை மற்றும் மாநிலங்களவை இடையே காணப்படும் விகிதம் 2.2:1 என்ற அளவிலேயே நிலைநிறுத்தப்பட வேண்டும் என்றும் அந்த தீர்மானம் வலியுறுத்துகிறது.

மாநில சுயாட்சி தேவை என்கிற அடிப்படையிலும்,

அண்ணல் அம்பேத்கர் உருவாக்கிய அரசியல் அமைப்பு சட்டத்தையும்,

மாநில உரிமைகளை பாதுகாக்கவும்

மகளிருக்கான பிரதிநிதித்துவத்தை உறுதிபடுத்தவும் இந்த தீர்மானம் கொண்டுவரப்பட்டதாக முதலமைச்சர் தெரிவித்தார்.

பெண்களுக்கான 33 சதவிகித இட ஒதுக்கீட்டை, 543 தொகுதிகளின் அடிப்படையில் வரும் 2029 மக்களவை தேர்தலில் நடைமுறைபடுத்த வேண்டும் என்று மத்திய அரசை வலியுறுத்தி தமிழ்நாடு சட்டமன்ற பேரவை இந்த தீர்மானத்தை ஒருமனதாக நிறைவேற்றுவதாகவும் முதலமைச்சர் குறிப்பிட்டார்.

இந்த தீர்மானத்தை எதிர்கட்சி தலைவர் திரு.உதய நிதி ஸ்டாலின், காங்கிரஸ், வி.சி.க, இந்திய யூனியன் முஸ்லீம் லீக், மனித நேய மக்கள் கட்சி, மனித நேய ஜனநாயக கட்சி, இந்திய கம்யூனிட் மார்க்சிஸ்ட் கம்யனிஸ்ட் கட்சிகளின் உறுப்பினர்கள் ஆதரித்து பேசினார்கள்.

அஇஅதிமுக சட்டமன்ற குழு தலைவர் திரு.எடப்பாடி பழனிச்சாமி

பிஜேபி உறுப்பினர் திரு.போஜ ராஜன்,

பா.ம.க உறுப்பினர் திரு.கணேஷ் குமார்,

தேமுதிக உறுப்பினர் திருமதி பிரேமலதா விஜயகாந்த், ஆகியோர் இந்த தீர்மானத்தின் ஒருபகுதியான மகளிருக்கு 33 சதவிகித இடஒதுக்கீட்டை ஆதரிப்பதாகவும், தொகுதி மறுவரை தொடர்பான தீர்மானத்தை எதிர்ப்பதாகவும் கூறினர்.

இந்த தீர்மானத்திற்கு ஆதரவு தெரிவித்த எதிர்கட்சி தலைவர் திரு. உதயநிதி ஸ்டாலின் உள்ளிட்ட அரசியல் கட்சியினருக்கு அமைச்சர் திரு. ஆதவ் அர்ஜூனா நன்றி தெரிவித்துக்கொண்டார்.

************

J C D பிரபாகர்

நாடாளுமன்றத்தில் மறு வரையறை மசோதா தாக்கல் செய்யப்படுவதற்கு முன்பாகவே அவசரமாக சட்டப்பேரவையில் ஏன் இந்த தனி தீர்மானம் கொண்டுவரப்படுகிறது என்ற எதிர்கட்சியினரின் கேள்விகளுக்கு விளக்கம் அளித்த பேரவை தலைவர் திரு. J C D பிரபாகர் வரும் முன் காப்பது நலம் என்ற அடிப்படையிலேயே இத்தீர்மானம் கொண்டுவரப்பட்டுள்ளதாகவும், இதை மீறி ஏதேனும் நடந்தால் அதை எதிர்கொள்ள முதலமைச்சர் தயாராக இருப்பதாகவும் கூறினார்.

மிகுந்த எச்சரிக்கை உணர்வோடு முதலமைச்சர் சரியான நேரனத்தில் இந்த தீர்மானத்தை கொண்டுவந்திருப்பதாக தாம் கருதுவதாக எடுத்துரைத்தார்.

************

மரியவில்சன்

தமிழகத்தின் வரி வருவாயை பெருக்க அரசு பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருவதாக மாநில நிதியமைச்சர் திரு.மரிய வில்சன் தெரிவித்துள்ளார்.

பேரவையில் பட்ஜெட் மீதான பொது விவாதத்திற்கு பதில் அளித்து பேசிய அமைச்சர் ஒன்றரை ட்ரில்லியன் டாலர் என்ற பொருளாதார இலக்கை எட்ட அரசு முயற்சிகள் மேற்கொண்டு வருவதாக கூறினார்.

கனிம வளம், மோட்டார் வாகன வரி, கலால் வரி, GST உள்ளிட்ட வரி இனங்களிலிருந்து கூடுதல் வருவாய் வந்துகொண்டிருப்பதாகவும்,

நிதி மேலாண்மைக்காக அமைக்கப்பட்டுள்ள கமிட்டியின் பரிந்துரையின் அடிப்படையில் கூடுதல் நிதி திரட்டப்பட்டு மக்களுக்கு அளித்த வாக்குறுதிகள் படிப்படியாக நிறைவேற்றப்படும் என்றும் கூறினார்.

************

விநோத்

வேளாண் பட்ஜெட் மீதான விவாத்திற்கு பதில் அளித்த வேளாண் அமைச்சர் திரு.வினோத் விவசாயிகளும் மக்களும் போற்றும் வெற்றி பட்ஜெட்டாக வேளாண் நிதிநிலை அறிக்கை அமைந்ததாக கூறினார்.

தமிழகத்தின் பல பகுதிகளில் உள்ள விவசாயிகள் மற்றும் விவசாய சங்க பிரதிநிதிகள், பல்வேறு கட்சியினர் உள்ளிட்டோரின் ஆலோசனைகளுக்கு பின்னரே வேளாண் நிதிநிலை அறிக்கை தயார் செய்யப்பட்டதாக எடுத்துரைத்தார்.

************

நாடாளுமன்றம்

நீட் விவகாரத்தில் மாணாக்கர் மீது தாக்குதல் நடத்தப்பட்டதாக கூறப்படுவது உள்ளிட்ட பல்வேறு பிரச்சனைகளில் அமளி காரணமாக நாடாளுமன்ற இரு அவைகளும் பிற்பகல் 2 மணிவரை இன்று ஒத்திவைக்கப்பட்டது.

மக்களவை இன்று கூடியதும் எதிர்கட்சி தலைவர் திரு.ஓம்.பிர்லா கேள்வி நேரத்தை தொடங்க முற்பட்டபோது இப்பிரச்சனைகளை எழுப்பி எதிர்கட்சியினர் அமளியில் ஈடுபட்டனர்.

தொடர் அமளி காரணமாக அவை தலைவர் மக்களவையை பிற்பகல் 2 மணிவரை ஒத்திவைத்தார்.

மாநிலங்களவையிலும் இதே பிரச்சனை எதிரொலித்தது.

அவைத்தலைவர் திரு.சி.பி.ராதாகிருஷ்ணன் பூஜ்ஜிய நேரத்தை எடுத்துக்கொள்ள முயன்ற போது மார்க்சிஸ்ட் உறுப்பினர் திரு.ஜான் பிரிட்டஸ் தமக்கு எதிராக கூறப்பட்டதாக சொல்லப்படும் அவதூறு சொல் தொடர்பான பிரச்சனையை எழுப்பினார்.

இதற்கு பதில் அளித்த அவைத்தலைவர் அவதூறாக பேசும் சில சம்பவங்கள் தமது கவனத்திற்கு கொண்டுவரப்பட்டுள்ளதாக கூறி உறுப்பினர்கள்

பேசும்போது பிறருடைய உணர்வுகளை புண்படுத்தாத வகையில் கவனத்துடன் உரையாற்றுவதன் அவசியத்தை வலியுறுத்தினார்.

நம் நாட்டின் கலாச்சாரம் தனித்துவமான என்றும், பரவலான பிராந்திய மரபுகளை உள்ளடக்கியது என்றும், எனவே மரபு சார்ந்த கலாச்சாரங்களுக்கு மதிப்பளிக்க வேண்டும் என்றும் கூறினார்.

மாநிலங்களவையில் அமளி தொடரவே மாநிலங்களவையை பிற்பகல் 2 மணிவரை அவைத்தலைவர் ஒத்திவைத்தார்.

************

<u>அமித்ஷா</u>

நாடாளுமன்றத்தில் நீட் தொடர்பான மாணாக்கரின் போராட்டம் உள்ளிட்ட அனைத்து பிரச்சனைகள் குறித்தும் விவாதிக்க மத்திய அரசு தயாராக இருப்பதாக உள்துறை அமைச்சர் திரு.அமித்ஷா தெரிவித்தார்.

நாடாளுமன்ற வளாகத்தில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய அவர் இப்பிரச்சனைகளில் மறைப்பதற்கு அரசுக்கு எதுவும் இல்லை என்றும் கூறினார்.

இப்பிரச்சனைகள் குறித்து விவாதிக்க எதிர்கட்சியினர் மதியம் 2 மணிக்குள் நோட்டிஸ் வழங்கினால், பிற்பகல் 3 மணிக்கு சம்மந்தப்பட்ட பிரச்சனைகள் தொடர்பாக விவாதங்களை நாடாளுமன்றத்தில் தொடங்கலாம் என்று குறிப்பிட்டார்.

விவாதம் தொடங்கினால் தாம் அவையில் இருந்து உறுப்பினர்களின் கருத்துக்களை கேட்க தயாராக இருப்பதாகவும் தெரிவித்தார்.

விவாதம் முடிவடைந்த பின்னரும், நாளை பிற்பகல் 3 மணிக்கு மீண்டும் விவாதங்களுக்கு பதில் அளிக்க தாம் தயாராக இருப்பதாக குறிப்பிட்டார்.

நீட் விவகாரத்தில் மாணவர்களின் போராட்ட பிரச்சனை உள்ளிட்ட அனைத்து அம்சங்கள் குறித்தும் விவாதிக்க மத்திய அரசு தயாராக உள்ளது என்று

நாடாளுமன்ற விவகாரத்துறை அமைச்சர் திரு.கிரண் ரிஜிஜூ நேற்றே தெளிவுபடுத்தியிருப்பதையும் அவர் சுட்டிக்காட்டினார்.

ஆனால் எதிர்கட்சிகள் அவை சுமூகமாக நடைபெற ஒத்துழைக்க மறுப்பதாக அவர் குறை கூறினார்.

மிக முக்கியமான பிரச்சனைகளுக்கான விவாதம் நாடாளுமன்ற நடைமுறைகளுக்கு ஏற்ப மேற்கொள்ள வேண்டியதன் அவசியத்தையும் திரு.அமித்ஷா எடுத்துரைத்தார்..

************

மன்சூக் மாண்டவியா

நாட்டின் 80ஆவது சுதந்திர தினம் வரும் சனிக்கிழமை கொண்டாடப்படுவதை ஒட்டி இல்லந்தோறும் மூவர்ண தேசிய கொடி இயக்க விழிப்புணர்வு சைக்கிள் பேரணியை மத்திய விளையாட்டுத்துறை அமைச்சர் டாக்டர் மன்சூக் மாண்டவியா புதுதில்லி மேஜர் தியான்சந்த் மைதானத்தில் இன்று தொடங்கிவைத்தார்.

வந்தே மாதரம் தேசிய பாடலின் 150 ஆண்டுகாலத்தை முன்னெடுத்து செல்லும் வகையில் இந்தாண்டு இல்லந்தோறும் மூவர்ண தேசிய கொடி இயக்கம் கொண்டாடப்படுகிறது.

மக்களிடையே தேசபக்தி உணர்வை எழுப்புவதோடு, தேசிய கொடியின் சிறப்பு குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் இல்லந்தோறும் தேசிய கொடி இயக்கம் வரும் 17ஆம் தேதிவரை இந்தாண்டு கொண்டாடப்படுகிறது.

************

ஆடி அமாவாசை

முன்னோர்களை வழிபடும் ஆடி அமாவாசை பக்தி சிரத்தையுடன் இன்று கடைபிடிக்கப்படுகிறது.

முக்கடல் சங்கமிக்கும் கன்னியாகுமரி கடல்,

தூத்துக்குடி புதிய துறைமுக கடற்கரை

காவிரி பாயும் தஞ்சை திருவையாறு புஷ்ப மண்டப படித்துறை உள்ளிட்ட மாநிலத்தின் முக்கிய நீர்நிலைகளில் ஏராளமானோர் புனிதநீராடி தங்கள் முன்னோர்களுக்கு தர்ப்பணம் கொடுத்தனர்.

ராமேஸ்வரம் அருள்மிகு ராமநாதசுவாமி திருக்கோவிலில் 22 தீர்த்த குளங்களிலும் பொதுமக்கள் நீண்ட வரிசையில் நின்று புனித நீராடி சுவாமி தரிசனம் மேற்கொண்டனர்.

ஸ்ரீரங்கம் அம்மா மண்டப படித்துறையில் பல்வேறு மாவட்டங்களை சேர்ந்த ஆயிரக்கணக்கானோர் முன்னோர்களுக்கு தர்ப்பணம் செய்து வழிபட்டதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

<u>வாய்ஸ்</u>

ஆடி அமாவாசையை ஒட்டி நாகை வேதாரண்யம் சன்னதி கடல், கோடியக்கரை ஆதி சேது கடலில் ஆயிரக்கணக்கானோர் புனிதநீராடி முன்னோர்களுக்கு பச்சரிசி காய்கறிகள் பழங்கங்கள் வெற்றிலை பாக்கு உள்ளிட்டவற்றை வைத்து தர்ப்பணம் செய்து வழிபட்டனர்.

************

<u>திருச்சி</u>

ஸ்ரீரங்கம் அருள்மிகு ரங்கநாதசுவாமி திருக்கோவிலிலிருந்து ஸ்ரீவில்லிபுத்தூர் ஆண்டாள் திருக்கோவிலுக்கு வஸ்திரம் பகுமானம் வழங்கும் நிகழ்ச்சி நாளை நடைபெறுகிறது.

************

<u>முல்லை பெரியாறு</u>

முல்லை பெரியாறு அணையின் பாதுகாப்பு மற்றும் பராமரிப்பு பணிகளை கண்காணிக்கும் வகையில் உச்சநீதிமன்ற உத்தரவு படி நியமிக்கப்பட்ட துணை கண்காணிப்பு குழுவினர் இன்று அணையில் ஆய்வு பணிகளை மேற்கொண்டனர்.

மத்திய அணைகள் பாதுகாப்பு ஆணைய தென்மண்டல இயக்குனரும், குழு தலைவருமான திரு.கிரீதரன் தலைமையில், முல்லை பெரியாறு பிரதான அணை, பேபி அணை, மதகுகள், சுரங்க பகுதிகள் உள்ளிட்ட பகுதிகளில் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டன.

தொடர்ந்து இன்றுமாலை குமிளி கண்காணிப்பு குழு அலுவலகத்தில் பருவமழையை முன்னிட்டு அணையில் மேற்கொள்ள வேண்டிய பாதுகாப்பு மற்றும் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்த ஆலோசனை இடம்பெற உள்ளது.

ஆய்வு முடிவுகள் மற்றும் ஆலோசனை கூட்டத்தில் எடுக்கப்படும் முடிவுகள் தொடர்பான அறிக்கை முதன்மை கண்காணிப்பு குழு தலைவருக்கு அனுப்பிவைக்கப்படும்.

************

<u>வானிலை</u>

வளிமண்டலத்தில் நிலவும் பலவீனமான காற்றழுத்த தாழ்வுபாதை காரணமாக மேற்கு தொடர்ச்சி மலை மாவட்டங்கள், சென்னை திருவள்ளூர் காஞ்சிபுரம் செங்கல்பட்டு திருவண்ணாமலை, மதுரை, தேனி திண்டுக்கல் மாவட்டங்களில் இன்று இடி மின்னல் காற்றுடன் கூடிய மிதமான மழை பெய்யக்கூடும் என்று சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது,

மதுரை திண்டுக்கல் சிவகங்கை புதுக்கோட்டை மாவட்டங்களில் ஒரு சில இடங்களில் நாளை மிதமான மழை பெய்யக்கூடும் என்றும் இம்மையம் கூறியுள்ளது.

************

<u>டென்னிஸ்</u>

கஜகஸ்தான் சேலஞ்சர் கோப்பை டென்னிஸ் ஆடவர் இரட்டையர் காலிறுதிக்கு முந்தைய சுற்றில் இந்தியாவின் ஜீவன் நெடுஞ்செழியன், சீனாவின் வாங் இணை - கஸகஸ்தான் இணையை இன்று பிற்பகல் எதிர்கொள்கிறது.